RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-342 | 07 டிசம்பர் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திமுக அரசு மின் கொள்முதல் முடிவை மாற்றியது ஏன்? பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கேள்வி



சென்னை, டிச.7

அதானி நிறுவனம் வருவாய் ஈட்ட உதவியாக திமுக அரசு தனது மின் கொள்முதல் முடிவை மாற்றி கொண்டது ஏன்? என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக மின்வாரியத்தின் சிறிய வகை மீட்டர்களுக்கான ஒப்பந்தம், அதானி நிறுவனத்துக்கு வழங்கப்படலாம் என்ற செய்தி செய்திதாள்களில் வெளியாகியிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு ரூ.19,000 கோடி ஆகும். தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கடந்த 2014ம் ஆண்டு அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திடமிருந்து சூரிய சக்தி மின்சாரம் கொள்முதல் செய்ய, ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 கட்டணத்தை நிர்ணயித்தது. மேலும் இந்தக் கட்டணமானது, 2016 மார்ச் வரை செல்லுபடியாகும் எனக் கால நீட்டிப்பு செய்யப்பட்டது.

பின்னர், கடந்த 2016ம் ஆண்டு செப்டம்பர் மாதம், தமிழ்நாடு மின்சார வாரியம், அதானி திட்டத்தைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறி, 25 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரத்திற்கு மட்டும், ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 விலையில் கொள்முதல் செய்வதாகவும், மீதமுள்ள 47 மெகாவாட் திட்டத்துக்கு, ஒரு யூனிட்டுக்கு ரூ.5.01 விலையிலும், மற்றொரு 216 மெகாவாட் திட்டத்திற்கும், யூனிட் ஒன்றுக்கு ரூ.5.01 என்ற விலையில் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய இரண்டு கட்டண ஆணைகளை வெளியிட்டது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம், தமிழக மின்சார வாரியத்தின் இந்த கட்டண மாறுபாட்டுக்கு எதிராக, தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் மேல்முறையீடு செய்தது. ஆனால், கட்டணத் திருத்தம் குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. 2021ம் ஆண்டு ஜூலை மாதம், தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனங்களின் சூரியசக்தி மின் திட்டங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 கட்டணத்தைத் தமிழக மின்சார வாரியத்திடம் இருந்து பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட கால நீட்டிப்பு வழங்குவதற்கான கோரிக்கைகளை நிராகரித்தது. ஆனால், 2023ம் ஆண்டு, ஜூலை மாதம், தமிழக மின்சார ஒழுங்கு முறை ஆணையம், அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்துக்கு ஆதரவாக, தமிழக மின்சார வாரியம் நிர்ணயித்த மாறுபட்ட கட்டணத்தை ரத்து செய்து தீர்ப்பளித்தது.

தங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வந்தால், ஒரு முறை வருவாயாக, தங்களுக்கு ரூ.568 கோடி வருவாய் கிடைக்கும் என்று அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது. கடந்த 2019ம் ஆண்டு, அதானி நிறுவனத்துக்கு ஆதரவாகத் தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது. ஆனால் கடந்த 2021ம் ஆண்டு, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் அதனை நிராகரித்தது. அதானியை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு, அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம், ஒரு முறை வருவாயாக ரூ.568 கோடி வருவாய் ஈட்ட உதவியாக, திமுக அரசு தனது மின் கொள்முதல் தொடர்பான முடிவை மாற்றிக் கொண்டதன் காரணம் என்ன என்பதுதான் எங்கள் கேள்வி. பதில் வருமா? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விஜய் பங்கேற்கும் அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவை தவிர்த்தது ஏன்? திருமாவளவன் விளக்கம்



சென்னை, டிச.7

'யாதுமுணர்ந்தே தவிர்த்தோம்; பகையின் சூதுமறிந்தே தகர்த்தோம்' என நடிகர் விஜய் பங்கேற்கும் அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவை தவிர்த்தது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னையில் (டிச.6) நடைபெறும் 'அம்பேத்கர் எல்லோருக்குமான தலைவர்' எனும் நூல் வெளியீட்டு விழாவில், பங்கேற்காதது குறித்து திருமாவளவன் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கை: '''எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' நூல், புரட்சியாளர் அம்பேத்கரின் நினைவு நாளான (டிச.6) சென்னையில் வெளியிடப்படுகிறது. 36 பேரின் கட்டுரைகள் தொகுக்கப் பெற்று இந்நூல் வெளிவருகிறது. இதில் என்னுடைய நேர்காணலும் இடம்பெற்றுள்ளது.

இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த ஏப்ரல்14 புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளில் நடைபெறுவதாக முதலில் திட்டமிடப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிடுவதாகவும் நான் பெற்றுக்கொள்வதாகவும் சொல்லப்பட்டது. ஆனால், அந்நிகழ்வு திட்டமிட்டவாறு நடைபெறாமல் தள்ளிப் போனது.

அதன்பின்னர், நடிகர் விஜய் பங்கேற்க இசைவளித்துள்ளார் என சொல்லப்பட்டது. அவரது கட்சியின் விக்கிரவாண்டி மாநாடு நடைபெறுவதற்கு முன்பு அவ்வாறு சொல்லப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன், இது அதிகார பூர்வமாக அறிவிக்கப்படாமலும் அழைப்பிதழ் அச்சிடப்படாமலும் இருந்த சூழலாகும். நடிகர் விஜய் இந்நிகழ்வில் பங்கேற்க விருக்கிறார் என்பது ஏற்பாட்டாளர்கள் உள்ளிட்ட எங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

ஆனால், திடுமென ஒரு தமிழ் நாளேடு இதனை பெரிய செய்தியாக தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. விஜய் கட்சி மாநாட்டுக்குப் பிறகு அவ்வாறு வெளியிட்டது. அதாவது, ''டிசம்பர்06, விஜய் திருமா ஒரே மேடையில்'' என தலைப்புச் செய்தி வெளியிட்டு, ஒரு நூல் வெளியீட்டு விழாவை பூதாகரப்படுத்தி அந்நாளேடு அதனை அரசியலாக்கியது. இதுதான் அவ்விழாவைப் பற்றிய 'எதிரும் புதிருமான' உரையாடல்களுக்கு வழிவகுத்தது. பல்வேறு யூகங்களுக்கும் இடமளித்தது. குறிப்பாக, மரபு ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் அவை கூட்டணி தொடர்பான உரையாடல்களாக அரங்கேறின.

ஒரு நூல் வெளியீட்டு விழாவாக, அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியிருக்க வேண்டிய நிகழ்வுக்கு அரசியல் சாயம் பூசியது ஏன்? அந்த நாளேட்டு நிறுவனத்துக்கு அப்படி என்ன உள்நோக்கம் இருக்கமுடியும்? இவ்வினா எழுவது இயல்பேயாகும். திமுகவுக்கும் விசிகவுக்கும் இடையிலுள்ள நட்புறவில் ஐயத்தைக் கிளப்பி, கருத்து முரண்களை எழுப்பி, திமுக கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதும், அதன் மூலம் கூட்டணியில் விரிசலை உருவாக்குவதும்தான் அதன் உள்நோக்கமாக இருக்கமுடியும்.

'திமுகவைத் தனது அரசியல் எதிரி என வெளிப்படையாகப் பேசியும், 'திராவிட முன்மாதிரி அரசு' என்பதைக் கடுமையாக விமர்சித்தும் தனது மாநாட்டில் உரையாற்றியுள்ள விஜய்யோடு, உங்கள் கூட்டணியிலுள்ள திருமாவளவன் ஒரே மேடையில் ஏறப் போகிறார் பாருங்கள்' என திமுக தொண்டர்களுக்குச் செய்தி சொல்வதும்; அதனடிப் படையில் என் மீதான அரசியல் நன்மதிப்பையும் நம்பகத் தன்மையையும் கேள்விக்கு உள்ளாக்குவதும் தான் அந்த நாளேட்டின் நோக்கமென்பது வெளிப்படுகிறது.

இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அரசியல் உள்நோக்கம் கற்பித்து அதனைப் பூதாகரப் படுத்திய அந்த நாளேட்டின் சதி அரசியல் பற்றி ஏன் ஒருவரும் வாய் திறக்கவில்லை? திமுக கூட்டணியை உடைக்க வேண்டுமென்கிற செயல் திட்டத்தோடு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருப்பவர்கள். இவர்களில் யாரும், அந்தப் பதிப்பகம் ஏன் ஏற்கெனவே இசைவளித்த திருமாவளவனை விட்டு விட்டு நிகழ்ச்சியை நடத்திட முடிவெடுத்தது என்கிற கேள்வியை எழுப்பவில்லை.

'விஜய் போதும்; திருமா தேவையில்லை' என்கிற முடிவை அந்த வார இதழால் எப்படி எடுக்க முடிந்தது? அதற்கு என்ன காரணமாக இருக்கமுடியும் என்று எவரும் அலசவில்லை. விஜய்யை மிகப் பெரிய சக்தியாகவும், நம்மை ஒரு ''துக்கடா'' வாகவும் எடைபோடுகிறவர்களால் எவ்வாறு நமக்காக வாதிட முடியும்? ''தான் பங்கேற்கா விட்டாலும் பரவாயில்லை; விஜய் பங்கேற்கட்டும்'' என திருமாவளவன் பெருந்தன்மையோடு ஒதுங்கியிருக்கிறார் என்று பேசுவதற்கு இங்கே யாருண்டு?

கடந்த கால் நூற்றாண்டு காலத் தேர்தல் அரசியலிலும் அதற்கு முன்னர் பத்தாண்டு காலத் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் களத்திலும் எத்தனை எத்தனை அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல் களையும் நாம் எதிர் கொண்டிருப்போம்? எனவே, யாது முணர்ந்தே தவிர்த்தோம்! பகையின் சூதுமறிந்தே தகர்த் தோம்!'' என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா கட்டுப்பாடுகள் விரைவில் அறிவிக்கப்படும்: அமைச்சர் சேகர்பாபு



சென்னை, டிச.7

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத் திருவிழா குறித்த கட்டுப்பாடுகள் இன்று மாலை அறிவிக்கப்படும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திருவண்ணாமலை மாவட்ட அமைச்சர், அறநிலையத்துறை செயலாளர், மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் ஆலோசனை நடைபெற உள்ளது. அந்த கூட்டத்தில் கார்த்திகை தீபத் திருவிழாவில் உள்ள சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு, எவையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியுமோ அவற்றை பரிசீலித்து, வருகின்ற பகதர்களின் பாதுகாப்பு அம்சங்களை கருத்தில் கொண்டு இன்று மாலை முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

காரணம், திருவண்ணாமலை நடக்கக்கூடாத சோகம் ஒன்று நடந்திருக்கிறது. அதையும் கருத்தில் கொண்டு ஆய்வின் இறுதியை முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று கார்த்திகை தீபத் திருவிழா கட்டுப்பாடுகள் இன்றே அறிவிக்கப்படும். இவ்வாறு சேகர் பாபு தெரிவித்தார்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத் திருவிழா வரும் 13ம் தேதி சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்று மூலவர் சந்நிதியில் அதிகாலை 4 மணிக்கு பரணி தீபம் ஏற்றப்படும். மாலை 6 மணி அளவில் 2,668 அடி உயரமுள்ள அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும். மகா தீப தரிசனத்தை 11 நாட்களுக்கு பக்தர்கள் காணலாம். கார்த்திகை தீபத் திருவிழா சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் வரும் 17ம் தேதி நிறைவு பெறுகிறது.

## காலநிலை மாற்றத்தை சமாளிக்க புயல், வெள்ள அபாயங்களை தடுக்கும் பணி தீவிரம்: முதல்வர் ஸ்டாலின் தகவல்




சென்னை, டிச.7

காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் வகையில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், கடற்கரை மாவட்டங்களை புயல்களில் இருந்து பாதுகாத்தல், வெள்ள அபாயங்களை தணித்தல், கடல்நீர் உட்புகுவதை தடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காலநிலை மாற்றத்துக்கான நிர்வாக குழுவின் 2வது கூட்டம் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில், முதல்வர் பேசியதாவது:

காலநிலை மாற்றம்தான் மனித சமுதாயம் எதிர்கொள்ள இருக்கும் மாபெரும் சவால். அதை எதிர்கொள்வதற்கான திட்டங்களை தீட்டி, செயல்படுத்தி வருகிறோம். அந்த வகையில், பசுமை காலநிலை நிறுவனம், காலநிலை மாற்ற இயக்கம், ஈரநில இயக்கம், நெய்தல் மீட்சி இயக்கம், பசுமை தமிழ்நாடு இயக்கம் ஆகியவை உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில், மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக தமிழகம் உள்ளது. இதுபோன்ற இயக்கங்கள், திட்டமிடுதல்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

இந்த இயக்கங்களுக்கு கொள்கை வழிகாட்டவும், ஆலோசனைகள் வழங்கவும், காலநிலை மாற்றத்துக்கான நிர்வாக குழுவை உருவாக்கி, அதற்கான உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பான அரசின் செயல் திட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பதுதான் இக்குழுவின் கடமை. தமிழகத்துக்கு இயற்கை அரணாக விளங்கும் கடற்கரையை வலுப்படுத்த, நெய்தல் மீட்சி இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுக்கு அலையாத்தி காடுகள், கடல் புற்கள் மற்றும் கடல் வாழிடங்கள் உருவாக்குதல், மீட்டெடுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்டத்தில் 7 பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுவிட்டது. அது போன்று குடிநீர் விநியோகமும் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 3 நாட்களில் மட்டும் விழுப்புரம் மாவட்டத்தில் உணவுப் பொட்டலங்கள், உணவுப் பொருட்கள் உள்ளிட்டவை சுமார் 3 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. 105 சமுதாய சமையல் கூடங்கள் மூலம் உணவு தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

டெல்லியில் காற்று மாசு அதிகரித்துள்ளது. அதையும் கவனத்தில் கொண்டு திட்டங்களை தீட்ட வேண்டும். உலக அரங்கில் காலநிலை மீள்திறன் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சியில் மற்ற மாநிலங்கள், நாடுகளுக்கு முன்னோடியாக தமிழகத்தை மாற்றிக் காட்டும் வகையிலான செயல் திட்டங்களை முன்னெடுப்போம். இவ்வாறு முதல்வர் பேசினார்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.2,000 ரேஷன் கடைகளில் டோக்கன் விநியோகம்



விழுப்புரம், டிச.7

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரணப் பொருட்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த பொருட்கள் விழுப்புரம் ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள் விளையாட்டரங்கில் வைக்கப்பட்டு, பிரித்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த பணியை நேற்று ஆய்வு செய்த வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் அமுதா செய்தியாளர்களிடம் கூறியதாவது: விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் பெரியளவில் பாதிப்பை சந்தித்துள்ளன. கடந்த இரு நாட்களுக்கு முன்பு தமிழக முதல்வர் விழுப்புரம் மாவட்டத்துக்கு வந்து, பாதிப்புகளைப் பார்வையிட்டுச் சென்று உள்ளார்.

புயலால் வாழ்வாதாரம் இழந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2,000 நிவாரணம் வழங்கப்படும் என முதல்வர் அறிவித்திருந்த நிலையில், அதற்கான அரசாணை வருவாய்த்துறை சார்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து நேற்று (டிச. 5)முதல் நியாய விலைக் கடைகளில் டோக்கன் வழங்கப்பட்டு, நியாயவிலைக் கடைகள் மூலம் நிவாரணத் தொகை வழங்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த 3 நாட்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்தடையும் நிவாரணப் பொருட்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்டத்தில் 7 பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுவிட்டது. அது போன்று குடிநீர் விநியோகமும் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 3 நாட்களில் மட்டும் விழுப்புரம் மாவட்டத்தில் உணவுப் பொட்டலங்கள், உணவுப் பொருட்கள் உள்ளிட்டவை சுமார் 3 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. 105 சமுதாய சமையல் கூடங்கள் மூலம் உணவு தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பிற மாவட்டங்களில் இருந்து வரும் உணவுப் பொருட்கள் உள்ளிட்டவை விழுப்புரம் மாவட்டத்தின் அந்தந்த எல்லைக்குட்பட்ட வட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கேயே வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் புயல் சேதப் பாதிப்பு அதிகளவில் இருப்பதால், முழுமையான கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது.

இந்த பணிகள் விரைவில் நிறைவு பெறும். புயலால் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் இழந்த குடும்பங்கள் அனைத்துக்கும் ரூ.2,000 நிவாரணத் தொகை வழங்கப்படும். ஒரு நாளைக்கு 100 பேர் வீதம் தொகை வழங்கப்படும் என்றார்.

## ரெப்போ விகிதம் 6.5 சதவீதமாக தொடர ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ஒப்புதல்



மும்பை, டிச.7

இந்தியரிசர்வ்வங்கியின் நிதிக் கொள்கைக் குழு (எம்பிசி), தொடர்ந்து 11வது முறையாக ரெப்போ விகிதத்தை மாற்றாமல் 6.50% ஆக வைத்திருக்க முடிவு செய்தது.

இந்தியரிசர்வ்வங்கியின் நிதிக் கொள்கைக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய ரிசர்வ்வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ், ''கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரம் ஆரோக்கியமான முறையில் வளர்ந்து வருகிறது. ஆர்பிஐ மற்றும் நிதிக் கொள்கைக் குழுவின் (எம்பிசி) முடிவுகள் முறையாக பின்பற்றப்படுவதே இதற்குக் காரணம்.

உயர் பணவீக்கம் மற்றும் ஜிடிபி சரிவுக்கு மத்தியில் ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தை மாற்றாமல் 6.5 சதவீதமாக வைத்துள்ளது. கொள்கையின் நடுநிலை நிலைப்பாட்டைத் தொடரவும், பணவீக்கம் மற்றும் வளர்ச்சியைப் பற்றிய கண்ணோட்டத்தைக் கண்காணிக்கவும் வட்டி விகிதம் மாறாமல் வைக்கப்பட்டுள்ளது. கடைசியாக 2023 பிப்ரவரியில் ரெப்போ விகிதங்களை 6.5% ஆக எம்பிசி உயர்த்தியது.

வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில் பணவீக்கம் 4% என்ற அளவில் இருப்பதில் கவனம் செலுத்தவும் எம்பிசி ஒருமனதாக முடிவு செய்துள்ளது. வளர்ச்சி வேகத்தில் சமீபத்திய மந்தநிலையை எம்பிசி கவனத்தில் கொண்டுள்ளது. இந்த ஆண்டின் இரண்டாம் பாதியிலும், அடுத்த ஆண்டும் வளர்ச்சி மீள்தன்மையுடன் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

ஆர்பிஐ சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நெகிழ்வான பணவீக்க இலக்கு கட்டமைப்பைப் பின்பற்றுவதே எங்கள் நோக்கம். வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில் விலை ஸ்திரத் தன்மையைப் பேணுவதே ஆர்பிஐயின் திட்டம். பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் விலை நிலைத்தன்மை முக்கியமானது. அதே நேரத்தில், வளர்ச்சியும் மிக முக்கியமானது.

இந்தியாவில், வளர்ச்சி மற்றும் பணவீக்கப் பாதைகளில் சமீபத்தில் சில பிறழ்வுகள் இருந்தபோதிலும், பொருளாதாரம் முன்னேற்றத்தை நோக்கி நிலையான மற்றும் சீரான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என தெரிவித்தார்.

நிதிக் கொள்கை மிகவும் முக்கியமானது. ஏனெனில் அது மக்களின் வாழ்க்கையை பாதிக்கிறது. பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவையும், அது சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும், காய்கறி விற்பனையாளர்கள், நடுத்தர வர்க்கம் முதல் கார்ப்பரேட்கள் வரை, விவசாயிகள் மற்றும் வணிகம் வரை பரவலான தாக்கங்களைக் கொண்டுள்ளது.

குறைந்த ஜிடிபி வளர்ச்சி, பணவீக்கம் மற்றும் வங்கி அமைப்பில் இறுக்கமான பணப்புழக்க நிலை பற்றிய கவலைகள் போன்ற பொருளாதார சவால்களுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.



கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் இரா.குமரகுரு தலைமையில் அன்னதானம் வழங்கப்பட்டது. திருக்கோவிலூர் அதிமுக நகர கழக செயலாளர் சுப்பு (எ) சுப்ரமணியன் தலைமையில் அம்மா திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செய்தனர். இதில் நகர கழக நிர்வாகிகள்,பிற அணி நிர்வாகிகள்,நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள்,தொண்டர்கள், பொதுமக்களும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி ரெ.மகேஷ் தலைமையில் , ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் மக்கள் குறைத்தீர்க்கும் முகாம் நடைப்பெற்றது.மாநகராட்சி அதிகாரிகளும் கலந்து கொண்டார். முகாமில் மக்களுடைய கோரிக்கை மனுக்கள் வாங்கப்பட்டது, துறைச்சார் அதிகாரிகளிடம் கடந்த காலத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியம் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கால தாமதமின்றி மக்கள் கோரிக்கைகள் நிறைவேற்றபட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## கன்னியாகுமரி மாவட்ட கடைகளில் போலீசார் போதை பொருள் சோதனை



கன்னியாகுமரி டிச.7

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம். போதை பொருட்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.அதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர. மகேஷ் குமார். சுசீந்திரம், கொட்டாரம் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் திடீர் சோதனை மேற்கொண்டர்.

இந்த சோதனையின் போது மாணவர்களுடன், மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்கள். போதை பொருள் சம்பந்தமாக ஏதேனும் தகவல் இருந்தால் உடனடியாக காவல்துறைக்கு தெரிவிக்க அறிவுறுத்தினார்.

மேலும் காவல் துணை கண் காணிப்பாளர். பள்ளிக்கூடங் களை சுற்றி உள்ள கடைகளிலும் போதைப்பொருள் குறித்த சோதனை நடத்தினார்.

## லயன்ஸ் லியோ தினத்தை முன்னிட்டு கோவை மத்திய சிறைச்சாலைக்கு புத்தகம் வழங்கல்



கோவை டிச.7

கோவை மாவட்டம் மத்திய சிறைச்சாலையில் நேரு நகர் லயன்ஸ் சங்கத் தலைவர் கனலி (எ) சுப்பு எழுதிய ஹெர் ஸ்டோரீஸ் பதிப்பக வெளியீடான ‘இளமை திரும்புதே’ புத்தகத்தை சிறைவாசிகள் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் வகையில் கோவை மத்திய சிறைச்சாலை சிறைக் காவல் கண்காணிப் பாளர் .செந்தில்குமாரிடம் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 324 சி மாவட்ட ஆளுநர் டாக்டர் நித்தியானந்தம் வழங்கினார்.

அருகில் மகாகவி பாரதி மண்டலத் தலைவர் மற்றும் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயல் செயலாளர் லயன் செந்தில்குமார், நேரு நகர் லயன்ஸ் சங்கப் பொருளாளர் இன்ஜினியர் தேஜஸ்வினி ஆகியோர் உள்ளனர்.

கனலி எழுதிய முதல் இரண்டு புத்தகங்களான ‘பெருங்காமப் பெண்களுக்கு இங்கே இடமிருக்கிறதா?.. உடைத்துப்பேசுவோம்‘ மற்றும் ‘அவள்..அவன்.. மேக்கப் ‘ ஆகிய நூல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டது.






வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பிரம்மபுரத்தில், பிரம்மபுரம் காவல் நிலையத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்ப மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்து சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், 1வது மண்டலக் குழுதலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி வடக்கு திமுக வன்னியராஜா புஷ்பலதா, ஒன்றியக் குழு தலைவர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கரின் 68ஆவது நினைவு நாளை முன்னிட்டு, அம்பேத்கார் சிலைக்கு ஐந்திணை மக்கள் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் தோழர் ஆரோ.ஸ்டீபன்ராஜ் தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கட்சியின் சிவகங்கை மேற்கு மாவட்டச் செயலாளர் தோழர் கூ.பிச்சைமுத்து, இராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் மு.சக்திவேல், காளையார்கோயில் ஒன்றியச் செயலாளர் தோழர் பிரபாகரன், மாவட்டக்குழு உறுப்பினர் ஆனந்தன், தோழர் அருளானந்தம், மகளிர் பாசறை நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்துகொண்டனர்.

## அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர்





சேலம், டிச.7

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் உன்னத திட்டம் மற்றும் நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி யதைத்தொடர்ந்து, சேலம், நேரு கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் நடைபெற்ற விழாவில் தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோராக மாற்றும் உன்னத திட்டம் மற்றும் நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இதனைத்தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். இதனைத்தொடர்ந்து, 2,366 பயனாளிகளுக்கு ரூ.4.05 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

குறிப்பாக, மகளிர் திட்டம் மூலம் வங்கிக்கடனுதவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகளும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் இலவச தையல் இயந்திரங்கள், வீட்டுமனைப்பட்டாக்களும், பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் நலவாரிய அட்டைகளும், தாட்கோ மூலம் கல்வி உதவித்தொகையும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று மாவட்ட தொழில் மையம் மூலம் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தின் கீழ் மானிய உதவுகளும், வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் தெளிப்பு நீர் பாசன அமைப்புகளும், சமூக நலத்துறையின் மூலம் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைப்புத் தொகையும் என பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் மொத்தம் 2,366 பயனாளிகளுக்கு ரூ.4.05 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

இதனைத்தொடர்ந்து, நிகழ்ச்சியில் பங்கேற்ற தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மதிய உணவினை சுற்றுலாத்துறை அமைச்சர் பரிமாறியதுடன், தூய்மைப் பணியாளர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் நா.ஜெயகுமார், தாட்கோ மண்டல மேலாளர் ராமதாஸ், அஸ்தம்பட்டி மண்டலக்குழுத்தலைவர் உமாராணி, நகராட்சித் தலைவர்கள், மாமன்ற உறுப்பி னர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டம் குட்டத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு



திண்டுக்கல், டிச.7

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், குட்டத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மொ.நா.பூங்கொடி, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம், குட்டத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நான்காம் வகுப்பு மாணவிகளுக்கு மொபைல் ஆஃப் மூலம் நடத்தப்பட்ட கணிதப் பாட வளரறி மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும், 1,2,3 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளின் வாசிப்புத் திறனை பரிசோதித்தார்.

மாணவ, மாணவிகள் உருவாக்கிய செயல்திட்ட வடிவமைப்புகள், சமூக அறிவியல் வண்ண வரைபடங் கள், பதப்படுத்தப்பட்ட தாவர மாதிரிகள், மயில், மீன், விலங்குகள் அட்டை ஓவியங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு, மாணவ, மாணவிகளை பாராட்டினார்.

மாணவ, மாணவிகளிடம் பாடங்கள் தொடர்பாக விளக்கங்கள் கேட்டு, மாணவ, மாணவிகளின் கற்றல் அடைவு மற்றும் வாசிப்புத் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பள்ளியில் எத்தனை மாணவ, மாணவிகள் உள்ளனர் என்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தார். காலை உணவு வழங்கப்படுவது குறித்து மாணவ, மாணவிகளிடம் கேட்டறிந்தார்.

பின்னர் சமையல் கூடம், பள்ளி வளாகத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தமாக பராமரிக்கப்பட்டுள்ளதா, சுகாதாரமான பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி செய்யப் பட்டுள்ளதா, வகுப்பறைகள் தூசு இல்லாமல் சுத்தமாக உள்ளதா, கழிப்பறைகள் சுகாதாரமாக பராமரிக்கப் படுகிறதா என்பதை பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

குட்டத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. காலை உணவுத் திட்டத்தில் உணவுகளை மாணவ, மாணவிகளுக்கு தரமாக, சுகாதாரமானதாக தொடர்ந்து வழங்க வேண்டும், பள்ளி வளாகங்களை தொடர்ந்து சுத்தமாகவும், சுகாதாரமாக வும் பராமரிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது“ என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவன், துறை அலுவலர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## எழுமாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் இல்லத் திருமண விழா





ஈரோடு டிச 7

ஈரோடு எழுமாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஈஸ்வரமூர்த்தி ஈ.காந்திமதி ஆகியோர் மகள் ஈ தீபிகாவுக்கும் அரச்சலூர் ஊசி பாளையம் எஸ் பூபதி பி கமலவேணி ஆகியோர் மகன் பி ரஞ்சித் ஆகியோர் திருமண விழா ஈரோட்டில் நடைபெற்றது இவ்விழாவில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே ஏ செங்கோட்டையன் தங்கமணி கே.வி இராமலிங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் கே சி கருப்பண்ணன் ஜெயக் குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.பி சிவசுப்பிரமணியம் பூந்துறை பாலு மொடக்குறிச்சி யூனியன் சேர்மன் கணபதி துணைத் தலைவர் மயில் ( எ)சுப்பிர மணியன் ஒன்றிய செயலாளர் கள் கதிர்வேல் செல்வராஜ் கலைமணி கொடுமுடி தங்கவேல் குலவிளக்கு ஊராட்சி தலைவர் நடராஜ் முன்னாள் சேர்மன் செந்தில் உட்பட பலர் இதில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்

ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஈஸ்வரமூர்த்தி ஈ.காந்திமதி ஆகியோர் மகள் ஈ தீபிகாவுக்கும் அரச்சலூர் ஊசிபாளையம் எஸ் பூபதி பி கமலவேணி ஆகியோர் மகன் பி ரஞ்சித் ஆகியோர் திருமண விழா ஈரோட்டில் நடைபெற்றது.

இவ்விழாவில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன் தங்கமணி கே.வி இராமலிங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் கே சி கருப்பண்ணன் ஜெயக் குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.பி சிவசுப்பிர மணியம் பூந்துறை பாலு மொடக்குறிச்சி யூனியன் சேர்மன் கணபதி துணைத் தலைவர் மயில் ( எ)சுப்பிர மணியன் ஒன்றிய செயலாளர் கள் கதிர்வேல் செல்வராஜ் கலைமணி கொடுமுடி தங்க வேல் குலவிளக்கு ஊராட்சி தலைவர் நடராஜ் முன்னாள் சேர்மன் செந்தில் உட்பட பலர் இதில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

## அம்பேத்காரின் 68 வது நினைவு நாளை முன்னிட்டு மரியாதை செலுத்திய அமைச்சர் சு.முத்துசாமி.

ஈரோடு டிச7

ஈரோடு மாவட்டம் டாக்டர் அம்பேத்க்கரின் 68 வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் முகாம் அலுவலகத்திலும், அதனை தொடர்ந்து மாவட்ட கழக அலுவலகத்திலும் பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அம்பேத்கர் முழு உருவ சிலைக்கு அமைச்சர் மற்றும் நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியன், துணை மேயர் வே.செல்வராஜ் மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மகளிர் அணியினர், கழக சார்பாக அணியினர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் கம்பம் அருகே ஆங்கூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய கல்வெட்டை திறந்து வைத்தார் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன்.இந்த விழாவிற்கு எஸ் டி பி ஐ கட்சி நிர்வாகிகள், கம்பம் வாவேர் பள்ளிவாசல் கமிட்டி நிர்வாகிகள் மற்றும் ஆங்கூர் ராவுத்தர் குடும்பத்தினர்கள் உட்பட பல்வேறு அமைப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி குலசேகரத்தில் ரப்பர் விவசாயிகள் மாநாடு மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்று சிறப்புரை

கன்னியாகுமரி, டிச.7

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் நடைபெற்ற ரப்பர் விவசாயிகள் மாநாட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, கலந்து கொண்டு தெரிவிக்கையில்






தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டதில் மட்டுமே இரப்பர் பயிரிடப்படுகிறது. இந்த மாவட்டத்தில் உள்ள அதிக மழைபொழிவு மற்றும் அதிக ஈரப்பதம் அதிக இரப்பர் மர பால் உற்பத்தியுடன் இரப்பர் சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் சாகுபடியின் மொத்த பரப்பளவு 29060 எக்டர் ஆகும். முக்கிய வட்டாரங்கள் மேல்புறம் (9580 எக்டர்), திருவட்டார் (9599 எக்டர்), தக்கலை (4901 எக்டர்) மற்றும் தோவாளை (1648 எக்டர்), கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் உற்பத்தி செய்யும் மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 43415 ஆகும். அதில் 43374 சிறு மற்றும் குறு விவசாயிகள் 21681 எக்டர் பரப்பளவில் இரப்பர் உற்பத்தி செய்கின்றனர். சுமார் 41 பெரு விவசாயிகள் 7373 எக்டர் பதிவு செய்யப்பட்ட தோட்டங்களில் சாகுபடி செய்கின்றனர். இந்தியாவில் 6,40,000 டன்கள் உற்பத்தியுடன் இயற்கை ரப்பர் உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் உள்ளது. அதே நேரத்தில் தாய்லாந்து 26,15,000 டன்கள் உற்பத்தியுடன் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து இந்தோனேஷியா 1,63.000 டன்கள் உற்பத்தியுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது. இந்தியாவின் உற்பத்தியில் கேரளா 85 சதவிகிதமும் தமிழ்நாடு 4 சதவிகிதமும் திரிபுராவை தொடர்ந்து பங்களிக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் சாகுபடி செய்யும் சிறு குறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் ரப்பர் பால் மற்றும் ரப்பர் சீட்டுகளை விற்பனை செய்யும் போது அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஆவன செய்யப்படும். மேலும் முதிர்ந்த ரப்பர் மரங்களை வெட்டி அகற்ற விவசாயிகள் முற்படும்போது மாவட்ட நிர்வாகத்தின் அனுமதி பெற கால தாமதம் ஏற்படுவதால் அதனை குறைத்து வழிமுறைகளை எளிமையாக்கி விரைவில் அனுமதி வழங்க வேண்டிய நடவடிக்கைகள் உடனே மேற்கொள்ளப்படும். மேலும் ரப்பர் விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் கேட்டறியப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ரப்பர் கழக நிர்வாக மேலாளர் எம்.வசந்தகேசன், ஐ.ஆர்எஸ், ரப்பர் உற்பத்தி இணை ஆணையர் சிஜூ, ரப்பர் உற்பத்தி கழக ஆணையர் சாலி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) ஷீலா ஜாண், ரப்பர் கழக அலுவலர்கள், ரப்பர் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மாணவ மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் செள.சங்கிதா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு குறித்த பணிக்குழு கூட்டம்

சிவகங்கை, டிச.7

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (05.12.2024) மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில், பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு, மாவட்ட அளவிலான பணிக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக் கையில்,



ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் மீதான தடையை செயல்படுத்தும் மாவட்ட அளவிலான பணிக்குழு அமைக்கப்பட்டு, பிளாஸ்டிக் பொருட்களின் மீதான தடை குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தின் வாயிலாக கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

வருங்கால சந்ததியினர்களின் நலனுக்காகவும், பிளாஸ்டிக்கை பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினைத் தடுக்கப்பதற்கும், பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும் பல்வேறு பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்தும் பழக்கத்தை மீண்டும் கொண்டு வரவும், தமிழக அரசால் தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வுநடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஒரு முறை பயன்படுத்தி தூக்கிஎறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் கைப்பைகள், நெய்யப்படாத பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதத் தட்டுகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், தெர்மாகோல் கோப்பைகள், உணவுப் பொருட்களை கட்ட பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தாள்கள், தண்ணீர் பைகள் / பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சி குழல்கள் மற்றும் பிளாஸ்டிக் கொடிகள் போன்றவை தயாரிக்கப்படுவதும், சேமித்து வைப்பதும், விநியோகிப்பதும், போக்குவரத்து செய்வதும், விற்பதும், உபயோகிப் பதும் அரசால் தடை செய்யப் பட்டுள்ளது பொதுமக்கள் அறிந்தவையாகும்.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, விற்பனை, விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், சிற்றுண்டிச் சாலைகள், திருமண மண்டபங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவிர்ப்பதற்கும், அதற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பனை ஓலைகவீளால் செய்யப்பட்ட பொருட்கள், பாக்குமட்டை தட்டுகள், வாழை இலைகள், தாமரை இலைகள், உலோக தட்டுகள், பீங்கான் தட்டுகள், பீங்கான் குவளைகள், உலோக குவளைகள், உலோக கொள்கலன், கண்ணாடி குவளைகள், கண்ணாடி பாட்டில்கள், காகித சுருள், துணி பைகள், அலுமினிய தாள், மண் குவளைகள், மண்பாண்டங்கள், காகித, மர உறிஞ்சு குழாய்கள்,காகிதம் / சணல் பைகள், காகித /துணி கொடிகள் ஆகியவைகளை பயன்படுத்திட அறிவுறுத்துதல் வேண்டும்.

மேலும், தடை செய்யப் பட்ட பிளாஸ்டிக் பொருட் களை விநியோகம் மற்றும் பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள், பல்பொருள் அங்காடிகள், சிற்றுண்டி கடைகள் ஆகியவைகளில், உள்ளாட்சி அமைப்புக்கள் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடை செய்யப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்தல் மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்நிறுவனங்கள் ஆகியவைகளின் மீது, துறை ரீதியான களஆய்வுகள் மேற்கொண்டு, விதிமுறை களின்படி உரிய நடவடிக் கைகளும், அபராதமும் விதித்தல் வேண்டும்.

மேலும், வணிக நிறுவனங்கள், உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், சிற்றுண்டிகள் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பிளாஸ்ட்டிக் பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்த்து, அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கான நடவடிக்கைகளை துறை சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் எஸ்.பாண்டியராஜன், மாவட்ட அளவிலான பணிக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சிகளின் ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாவட்டம் அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு ஆதிதிராவிடர் -பழங்குடியினர் நலத்துறை சார்பாக அரசு நலத்திட்ட உதவிகள்

மதுரை, டிச.7

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக நடைபெற்ற விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் 442 பயனாளிகளுக்கு ரூ.2.76 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது:



இந்திய அரசியலமைப்பின் தந்தை என போற்றப்படும் அண்ணல் அம்பேத்கர் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராவார். அவர் உருவாக்கிய அரசியலைப்பு சட்டம் எளிய மக்களுக்கான பாதுகாப்பாகவும், சமத்துவத்தை வலியுறுத்துவதாகவும் விளங்குகிறது. இந்திய அளவில் சமத்துவத்தை பாதுகாப்பதிலும், ”எல்லோருக்கும் எல்லாம்” என்ற நோக்கில் அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங்களை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு மாநிலம் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக செயல்படுகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். சாதி, மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் சமம் என்ற நோக்கத்தை வலியுறுத்தும் வகையில் சமத்துவபுரம் திட்டத்தை செயல்படுத்தினார்கள். அதேபோல, நிலமற்ற, வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல், புதிய வீடு வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தூய்மைப் பணியாளர்களின் சேவையை கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்திடும் வகையிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் சுயதொழில் தொடங்கி தொழில் முனைவோர்களாக உருவாக்கிட மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்தகைய திட்டங்களை ஆதிதிராவிடர் மக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

முன்னதாக, சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற விழா காணொளி காட்சி மூலம் திரையிடப்பட்டது. மேலும், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமுக்கம் மாநாட்டு மையத்தில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள. சங்கீதா, ஆகியோர் பங்கேற்று தூய்மைப் பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்கள். அதன் பின்பு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை அவுட் போஸ்ட் அருகேயுள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, அவர்கள், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி (மதுரை வடக்கு) அவர்கள், ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்) அவர்கள், மு.பூமிநாதன் (மதுரை தெற்கு) அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் ர.சக்திவேல் அவர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி அவர்கள், மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு.ராமகிருஷ்ணன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்திற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நிவாரண பொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாநகராட்சி ஆணையாளர் மதுபாலன் மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.

# வேலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 715 எஸ்சி எஸ்டி பிரிவினருக்கு ரூ.6.59கோடியில் நலதிட்ட உதவி வழங்கும் விழா

வேலூர் டிச.7

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தனியார் கல்லூரி அரங்கில் நடைபெற்ற, தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர். மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் வழங்குவதை தொடங்கிவைப்பதை தொடர்ந்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மாவட்டத்தில் 715 பயனாளிகளுக்கு ரூ. 6.59 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.



கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு. மாநகராட்சி மேயர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு. துணை மேயர் மா.சுனில் குமார், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழுதலைவர், துணைதலைவர், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் இராமசந்திரன் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் கன்னங்குளம் எல்.எம். நடுநிலைப் பள்ளி ஆண்டு விழா-பரிசளிப்பு



கன்னியாகுமரி டிச7

கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமம் அருகே கன்னங்குளம் லி.வி.நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழாவை முன்னிட்டு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. கன்னங்குளம் சிஎஸ்ஐ ஆயிர் மண்டல போதகர் Rev.P. பிரின்ஸ்லி சாம் ஏசுதாஸ் தலைமை தாங்கினார்கள். பள்ளி தாளாளர் யோவான் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக சமூக சேவகர், ஆன்மீக செம்மல், கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவர் . P.T.செல்வகுமார் விளையாட்டுப் போட்டிகளை தொடங்கிவைத்து மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் பிரியாணி விருந்து வழங்கினார். செல்வகுமார் சிறப்புரையாற்றும் போது இந்த மாணவர்களின் பருவம் பட்டாம்பூச்சி பருவம் அவர்களை நல்ல உயர பறக்க வைப்பது ஆசிரியர்களின் கடமை. எதிர்கால தலைமுறை மாணவர்களை நம்பி தான் உள்ளது என்று கூறினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் மிஜில் டானி நன்றியுரை கூறினார். விழாவில் கலப்பை மக்கள் இயக்க வர்த்தக அணி தலைவர் விஸ்வை சந்திரன், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# தேனியில் தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி டிச07

விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த டாஸ்மாக் விற்பனையாளராக சக்திவேல் என்பவர் பணி புரிந்து வந்தார்.சில நாட்களுக்கு முன்பு ஃபெஞ்சல் புயல் நேரத்தில் பணிச்சுமையின் காரணமாக டாஸ்மாக் கடைக்கு பணி நிமித்தமாக சென்ற நிலையில் அப்போது ஏற்பட்ட வெள்ளத்தால் சக்திவேல் உயிரிழந்தார். இதன் காரணமாக தேனி மாவட்ட வாணிப கழகம் அலுவலக நுழைவாயிலில் டாஸ்மாக் சங்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட செயலாளர் கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் மாரிமுத்து, பொருளாளர் அய்யப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக ஏ ஐ.டி.யூ.சி தேனி மாவட்ட பொதுச்செயலாளர் ராஜ்குமார்,




மாவட்ட செயலாளர் ஞானவேல், பொருளாளர் சென்றாய பெருமாள், மாவட்ட துணைத் தலைவர் கர்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். டாஸ்மாக் பணியாளர் சக்திவேல் இறப்பிற்கு ஐம்பது இலட்சம் இழப்பீடு, சக்திவேல் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, டாஸ்மாக் பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு உட்பட பல கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக்கோரி கண்டன கோஷம் எழுப்பினர். இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர்கள் சக்திவேல்,சுந்தரமூர்த்தி,துணைத் தலைவர்கள் லட்சுமணன்,பரமன் தேனி ஒன்றிய நிர்வாகிகள் கருப்பையா,மணி மோடி ஒன்றிய நிர்வாகிகள் முனியாண்டி,பவுன்ராஜ் பெரியகுளம் ஒன்றியநிர்வாகிகள் சிதம்பரம், ராஜேந்திர வேல் ஆண்டிபட்டி ஒன்றியநிர்வாகிகள் கணேசன், பிச்சைமணி, வேல்முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.கண்டன ஆர்ப்பாட்டம் முடிவில் உயிரிழந்த சக்திவேல் இறப்பிற்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

# கழிவுநீர் கலந்த குடி நீரை அருந்தி உடல் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்த பிரேமலதா விஜயகாந்த்



செங்கல்பட்டு டிச.7

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் காமராஜ் நகர் மற்றும் ஆலந்தூர் கண்டோன்மெண்ட் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் கலந்த குடிநீர் குடித்து மூவர் பலியானதோடு வாந்தி மயக்கம் வயிற்றுபோக்கு போன்றவற்றால் பாதித்து 50 க்கும் மேற்பட்டோர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

இந்நிலையில் பாதிக்கபட்டவர்களை தேமுதிக தலைவர் ப்ரேமலதா விஜயகாந்த் நேரில் பார்வையிட்டு நலன் விசாரித்ததோடு அவர்களின் நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார் உடன் மாநிலத் துணைச் செயலாளர் பார்த்தசாரதி, செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன், மாவட்டத் துணைச் செயலாளர் மா.செழியன், பல்லாவரம் பகுதி செயலாளர் ரிச்சர்ட், பம்மல் பகுதி செயலாளர் வில்சன், பகுதி செயலாளர்கள் கேட் எம்.தர்மா, மார்க்கெட் ஞானப்பால், மகளிர் அணி செயலாளர் பார்த்திமா மற்றும் மாவட்ட, நகர, பகுதி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# பழனி அருகே மாருதி கார் ஷோரூமில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை திருடி சென்ற நபரை 2 மணி நேரத்துக்குள் பிடித்த காவல்துறை

பழனி டிச.7

திண்டுக்கல் மாவட்டம் பழனி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது ஆயக்குடி பேரூராட்சி. இப்பகுதியில் றிலிகி மாருதி என்ற மாருதி கார் விற்பனை செய்யும் கார் ஷோரூம் ஒன்று உள்ளது. இதன் உரிமையாளர் காரைக்குடியை சேர்ந்தவர் ஆவார். கார் ஷோரூம் இரவுநேர காவலாளியாக 75வயதுடைய அல்லி முத்து என்ற முதியவர் பணியில் இருந்து வருகிறார்.

நேற்று வழக்கம்போல இரவு நேர காவல் பணிக்கு வந்த அல்லி முத்து இரவு 11 மணிக்கு மேல் அருகில் உள்ள கடை வாசலில் படுத்து உறங்கியுள்ளார். இந்நிலையில் கார் ஷோரூமின் முன்பு வைக்கப்பட்டுள்ள கண்ணாடியை




உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்த மர்ம நபர்கள் சிசிடிவி கேமரா இணைப்புகளை துண்டித்துவிட்டு, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களில் 10லட்சம் ரூபாய் மதிப்புள்ள புதிய ஸ்விப்ட் கார் ஒன்றை திருடிச்சென்றர். செல்லும்போது சிசிடிவி காட்சிகள் அடங்கிய ஹார்ட் டிஸ்க்குகளையும் எடுத்துச் சென்றனர். இந்நிலையில் இன்று அதிகாலை அவ்வழியே வாக்கிங் சென்ற பொதுமக்கள் சோரும் கண்ணாடி உடைந்து இருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து ஆயக்குடி காவல்நிலையத்திற்கு தகவல் அளித்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஆயக்குடி போலீசார் தகவலின் அடிப்படையில். பழனி காவல்துறை துணை கண்காணிப்பாளர் தனஜெயன் தலைமையிலான.காவல் ஆய்வாளர் கவிதா. சார்பு ஆய்வாளர் ஆனந்த் காவல்துறையினர் ஒட்டன்சத்திரம் அருகே . வெள்ளமரத்துப்பட்டியை சேர்ந்த சிவா என்பவர் காரை திருடி சென்றது தெரியவந்தது. கார் கொள்ளையடிக்கப்பட்ட இரண்டுமணிநேரத்தில் சிசிடிவியின் அடிப்படையில் கார் மற்றும் கொள்ளையனை கண்டு பிடித்த பழனி காவல்துறையினரை சமூக அலுவலகம் பொதுமக்களும் பாராட்டிய வண்ணம் உள்ளனர்.

# ஈரோடு நாடார் மேடு அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா

ஈரோடு டிச.7

ஈரோடு மாவட்டம் நாடார் மேடு பகுதியில் அமைந்துள்ளது நூற்றாண்டுகளுக்கு மேலும் பழமையான அருள்மிகு ஸ்ரீ சக்தி விநாயகர் திருக்கோயில் அமைந்துள்ளது இக்கோயிலில் கருப்பண்ணசாமி ஜனநாயகர். ஸ்ரீ ஞான கிரி வேலன் தக்ஷிணாமூர்த்தி துர்க்கை நவகிரகம் அபய ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்களின் கோயில்களும் அமைந்துள்ளது கோயில்களின் ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது முன்னதாக கடந்த புதன்கிழமை மங்கள இசை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது தொடர்ந்து காலை பக்தர்கள் காவிரி ஆற்றுக்கு சென்று புனித நீர் எடுத்து வந்து சாமிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது பின் சுவாமிகளுக்கு மலர்களை கொண்டு சிறப்பு அலங்காரம்



செய்யப்பட்டது இதை தொடர்ந்து காலை கோவில் கலசங்கள் மீது புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது தொடர்ந்து பத்திரம் இது புனித நீர் தெளிக்கப்பட்டது கும்பாபிஷேகத்தையொட்டிபக்தர்களுக்கு பிரசாதங்களும் அன்னதானங்களும் வழங்கப்பட்டது விழா ஏற்பாடுகளை நாடார் மேடு ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# டாக்டர் அம்பேத்காரின் 68வது நினைவு நாளை முன்னிட்டு தேமுதிக சார்பில் மாலை அணிவித்து மரியாதை

செங்கல்பட்டு டிச.7

செங்கல்பட்டு மாவட்டம் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் 68வது நினைவு நாளை முன்னிட்டு தேமுதிக சார்பில் தாம்பரம் பேருந்து நிலையத்தில் செங்கல்பட்டு மாவட்ட துணைச் செயலாளர் மா. செழியன் அவர்கள் தலைமையில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கோஷங்களை எழுப்பினர் இதில் மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் தனபால், தெற்கு பகுதி செயலாளர் கேட்.எம்.தர்மா, மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் பாத்திமா, மாவட்ட வழக்கறிஞர் துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, அபிநயா, தெற்கு பகுதி துணைச் செயலாளர் தமிழரசி ஐக்கிய தர்மா மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், மத்திய பகுதி துணைச் செயலாளர் சதீஷ், மேற்கு பகுதி துணைச் செயலாளர் எஸ்.மாலதி, மத்திய பகுதி பிரதிநிதி ஏ.பாலமுருகன், மத்திய பகுதி கேப்டன் மன்ற டாக்டர் நெரும்பூர் ராஜேந்திரன், மத்திய பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் வள்ளி, வட்டச் செயலாளர்கள் மகேந்திரன் அனைவரும் கலந்து கொண்டு அம்பேத்கர் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கோஷங்களை எழுப்பினர்..






Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161